**081/DM/19**

T.C : 06

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

## DEPARTMENTAL EXAMINATIONS

## DEPARTMENTAL TEST FOR MUNICIPAL COMMISSIONER IN THE MUNICIPAL ADMINISTRATION DEPARTMENT – PART – I

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

### OBJECTIVE TYPE
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்கக்கூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 100 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.
இவ்வினாத்தாள் 100 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answers all questions. All questions carry equal marks.
அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

**[Turn over**

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.

விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.

வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.

வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.

விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.

மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.

வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. The Registration of Births and Deaths Act enacted on which of the following year

(A) 1949 (B) 1959

(C) 1969 (D) 1979

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டம் கீழ்கண்ட எந்த வருடத்தில் இயற்றப்பட்டது?

(A) 1949 (B) 1959

(C) 1969 (D) 1979

2. In the Registration Births and Deaths Act, which one of the following section describe penalties

(A) Section 21 (B) Section 22

(C) Section 23 (D) Section 24

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் கீழ் பின்வரும் எந்தப் பிரிவில் அபராதம் விதித்தல் தொடர்பாக எடுத்துரைக்கின்றது

(A) பிரிவு 21 (B) பிரிவு 22

(C) பிரிவு 23 (D) பிரிவு 24

3. In the Registration of Birth and Death Act following chapter explaining Registration establishments

(A) Chapter II (B) Chapter III

(C) Chapter IV (D) Chapter V

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் பின்வரும் அத்தியாயத்தில் இத்துறையின் பணியமைப்பினை விளக்குகின்றது

(A) அத்தியாயம் II (B) அத்தியாயம் III

(C) அத்தியாயம் IV (D) அத்தியாயம் V

4. Under the Registration of Birth and Death Act comprising following number of Chapters

(A) 4 Chapters (B) 5 Chapters

(C) 6 Chapters (D) 7 Chapters

பிறப்பு இறப்பு பதிவு சட்டமானது பின்வரும் அத்தியாயங்களை உள்ளடக்கியது

(A) 4 அத்தியாயங்கள் (B) 5 அத்தியாயங்கள்

(C) 6 அத்தியாயங்கள் (D) 7 அத்தியாயங்கள்

5. In the Registration of Birth and Death Act Chapter IV discussing about following subject

(A) Registration of Birth and Deaths

(B) Maintenance of Records and Statistics

(C) Registration establishment

(D) Miscellaneous

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் அத்தியாயம் IV ல் பின்வரும் பொருள் குறித்து விவரிக்கின்றது

(A) பிறப்பு இறப்புகளை பதிவு செய்தல்

(B) பதிவேடுகள் மற்றும் புள்ளி விபரங்களை பராமரித்தல்

(C) பதிவுத்துறையின் பணியமைப்பு

(D) இதர இனங்கள்

6. Under which of the following section in The Registration of Births and Deaths Act the state Government may appoint District Registrar

(A) Section 6 (B) Section 5

(C) Section 4 (D) Section 3

பின்வரும் எந்தப்பிரிவின் படி பிறப்பு இறப்பு பதிவுச் சட்டத்தின் கீழ் மாநில அரசானது மாவட்ட பதிவாளரை நியமிக்கலாம்

(A) பிரிவு 6 (B) பிரிவு 5

(C) பிரிவு 4 (D) பிரிவு 3

7. In the Registration of Births and Deaths Act under rule 13, the Registrar shall be registered after expiry period on payment of late fees within

(A) 30 days (B) 45 days

(C) 60 days (D) 90 days

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் கீழ் பிரிவு 13ன் படி பதிவுக்கான காலம் கடந்த நிலையில் பதிவாளர் உரிய கால தாமதக்கட்டணம் பெற்று எத்தனை நாட்களுக்குள் பதிவு செய்யலாம்

(A) 30 தினங்கள் (B) 45 தினங்கள்

(C) 60 தினங்கள் (D) 90 தினங்கள்

8. In the Registration of Births and Death Act the following section explains provision to made corrections or cancellation of entry.

(A) Section 14 (B) Section 15

(C) Section 16 (D) Section 17

பிறப்பு இறப்பு பதிவுச் சட்டத்தின்படி கீழ்காணும் பிரிவில் பதிவேட்டில் திருத்தம் அல்லது நீக்கம் மேற்கொள்ளுதல் பற்றி விளக்குகிறது

(A) பிரிவு 14 (B) பிரிவு 15

(C) பிரிவு 16 (D) பிரிவு 17

9. In the Registration of Births and Deaths Act under section 19 describes following subject regarding registration

(A) Registration of child name

(B) Delayed Registration of Births and Deaths

(C) Inspection of Registration

(D) Registrars to send periodical returns

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் கீழ் பிரிவு 19ல் பதிவு தொடர்பாக கீழ்கண்ட இனங்களை விவரிக்கின்றது

(A) குழந்தையின் பெயரை பதிவு செய்தல்

(B) பிறப்பு இறப்பு தாமதமாக பதிவு செய்தல்

(C) பதிவுகளை ஆய்வு செய்தல்

(D) பதிவாளர் காலமுறை அறிக்கையினை அனுப்புதல்

10. In the Registration of Birth and Death Act in which of the following section explains special provision regarding Births and Deaths in a farm house

(A) Section 8

(B) Section 9

(C) Section 10

(D) Section 11

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தில் எந்தப்பிரிவின் கீழ் தோட்டப்பண்னை பகுதிகளுக்கு பிறப்பு இறப்பு பதிவு தொடர்பாக சிறப்பு ஏற்பாடுகள் எடுத்துரைக்கின்றது

(A) பிரிவு 8

(B) பிரிவு 9

(C) பிரிவு 10

(D) பிரிவு 11

11. Under section 11 in the Registration of Births and Deaths Act explaining following provision in Births and deaths registration

(A) Delayed registration of Birth and Deaths

(B) Extracts of registration entries to be given to informant

(C) Informant to sign the register

(D) Registration of name child

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் கீழ் பிரிவு 11ல் பிறப்பு இறப்பு பதிவுகள் தொடர்பாக கீழ்கண்ட நடைமுறை விளக்கப்பட்டுள்ளது.

(A) காலதாமத பிறப்பு இறப்பு பதிவுகள்

(B) பதிவுச் சுருக்கத்தினை தகவலருக்கு அளித்தல்

(C) தகவலர் கையொப்ப மிடுதல்

(D) குழந்தையின் பெயர் பதிவு செய்தல்

12. In the Registration of Births and Deaths Act Chapter V describes following subject regarding registration

(A) Maintenance of Records and Statistics

(B) Registration establishments

(C) Miscellaneous

(D) Registration of Births and Deaths

பிறப்பு இறப்பு பதிவுச் சட்டத்தின் கீழ் அத்தியாயம் V ல் பதிவு தொடர்பாக பின்வரும் இனங்கள் விவரிக்கப்பட்டள்ளது

(A) பதிவேடுகள் மற்றும் புள்ளிவிபரங்கள் பராமரித்தல்

(B) பதிவுத்துறையின் பணியமைப்பு

(C) இதர இனங்கள்

(D) பிறப்பு இறப்பு பதிவுகள் தொடர்பாக

13. The registration of Births and Deaths Act under section 20 describing following provision of Registration

(A) Registration of Births and Deaths of citizen outside India

(B) Correction or cancellation of the entry in the register

(C) Registration of name of child

(D) To keep register in the prescribed form

பின்வரும் எந்த ஏற்பாடுகள் குறித்து பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் பிரிவு 20 ஆனது விளக்குகிறது

(A) இந்தியாவிற்கு வெளியே வசிக்கும் குடிமகனின் பிறப்பு இறப்பு பதிவுகள் தொடர்பாக

(B) திருத்தம் மற்றும் நீக்கம் முதலியவற்றை பதிவேட்டில் மேற்கொள்ளுதல்

(C) குழந்தையின் பெயர் பதிவு தொடர்பாக

(D) பதிவேடுகளை வரையறுக்கப்பட்ட படிவத்தில் பராமரித்தல்

14. In the Registration of Births and Deaths Act which of the following section given powers to frame rules.

(A) Section 29

(B) Section 30

(C) Section 31

(D) Section 32

பிறப்பு இறப்பு பதிவுச்சட்டத்தின் கீழ் விதிகளை உருவாக்கிட கீழ்காணும் எந்தப்பிரிவில் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 29

(B) பிரிவு 30

(C) பிரிவு 31

(D) பிரிவு 32

15. The power of Registrar to obtain information regarding Birth and Death explained in the following section of Registration of Birth and Death Act.

(A) Section 20

(B) Section 21

(C) Section 22

(D) Section 23

பின்வரும் எந்தப்பிரிவின் கீழ் பதிவாளர் பிறப்பு மற்றும் இறப்பு தொடர்பான தகவல்களை பெறுவதற்கான அதிகாரத்தினை பிறப்பு இறப்பு பதிவு சட்டத்தின் படி வழங்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 20

(B) பிரிவு 21

(C) பிரிவு 22

(D) பிரிவு 23

16. In the Registration of Birth and Deaths Act under following section central Government has power to give direction to state Government

(A) Section 19 (B) Section 20

(C) Section 21 (D) Section 22

பிறப்பு இறப்புச்சட்டத்தின் கீழ் எந்தப்பிரிவில் மத்திய அரசின் மூலம் மாநில அரசிற்கு வழிகாட்டும் நடைமுறைகளை அளித்திட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(A) பிரிவு 19 (B) பிரிவு 20

(C) பிரிவு 21 (D) பிரிவு 22

17. Special buildings means

(a) A Residential building with more than two floors

(b) A commercial building with more than two floors

(c) A commercial building exceeding 300 sq.m. floor area

(d) A Residential building with more than 4 dwelling units

(A) (a) only (B) (b) and (c)

(C) (a) and (d) (D) (a), (b), (c) and (d)

சிறப்புக் கட்டிடங்கள் என்பது

(a) இரண்டு தளங்களுக்கு மேற்பட்ட குடியிருப்புக் கட்டிடம்

(b) இரண்டு தளங்களுக்கு மேற்பட்ட வணிகக் கட்டிடம்

(c) 300 ச.மீ அளவிற்கு மேல் தள அளவினைக் கொண்ட வணிக கட்டிடம்

(d) 4 மனைகளுக்கு மேல் கொண்டுள்ள குடியிருப்பு கட்டிடம்

(A) (a) only (B) (b) and (c)

(C) (a) and (d) (D) (a), (b), (c) and (d)

18. Maximum floor space Index (FSI) in special buildings of Residential and commercial purpose

(A) 1.5 (B) 2.0

(C) 2.5 (D) 3.0

சிறப்புக் கட்டிடங்களின் குடியிருப்பு மற்றும் வணிக பயன்பாட்டிற்கான கட்டிடங்களின் அதிகபட்ச தள இடக்குறியீடு (FSI) பின்வருமாறு

(A) 1.5 (B) 2.0

(C) 2.5 (D) 3.0

19. Under Development control regulations maximum plot coverage for special buildings of Residential purpose

(A) 60% (B) 70%

(C) 75% (D) 80%

வளர்ச்சிக் கட்டுப்படுத்தும் நடைமுறை (DCR) கீழ் அதிகபட்ச மனை மறைப்பு (Plot Coverage) கீழ்கண்ட அளவு வரை குடியிருப்புக்கான சிறப்புக்கட்டிடத்தில் பயன்படுத்திடலாம்

(A) 60% (B) 70%

(C) 75% (D) 80%

20. Under Development control regulations, the Open Space Reservations (OSR) provisions given in following schedule

(A) Schedule I (B) Schedule II

(C) Schedule III (D) Schedule IV

வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறை (DCR) கீழ் திறந்த இடவெளி ஒதுக்கீடு (OSR) தொடர்பான ஏற்பாடுகளை கீழே உள்ள அட்டவணை கொண்டுள்ளது.

(A) அட்டவணை I (B) அட்டவணை II

(C) அட்டவணை III (D) அட்டவணை IV

21. In Group Development as per Development control regulations spacing block should be

(A) 3 meters (B) 4 meters

(C) 5 meters (D) 6 meters

வளர்ச்சிக் கட்டுப்படுத்தும் நடைமுறைகள் (DCR) படி குழு கட்டிட வளர்ச்சியில் இரு பிளாக்குகளுக்கு இடையே இருக்கப்பட வேண்டிய இடைவெளியானது

(A) 3 மீட்டர் (B) 4 மீட்டர்

(C) 5 மீட்டர் (D) 6 மீட்டர்

22. Under Group Development buildings as per development control regulations minimum plot extent is not less than

(A) 450 sq.m. (B) 500 sq.m.

(C) 550 sq.m. (D) 600 sq.m.

குழு கட்டிட வளர்ச்சியில் கீழே குறிப்பிட்டுள்ள அளவிற்கு குறைவின்றி மனைப்பரப்பு அமைத்திட வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறை தெரிவிக்கின்றது

(A) 450 ச.மீ. (B) 500 ச.மீ.

(C) 550 ச.மீ. (D) 600 ச.மீ.

23. In Development control Regulations (DCR) Schedule V explains following provisions

(A) Parking spaces (B) Solar energy capture provisions

(C) Open space reservations (OSR) (D) Rain water conservation

வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறைகள் (DCR) கீழ் அட்டவணை V ல் பின்வரும் ஏற்பாடுகள் குறித்து விளக்குகிறது

(A) வாகன நிறுத்துமிடம் (B) சூரிய ஒளி சேகரிப்பு ஏற்பாடுகள்

(C) திறந்த இடவெளி ஒதுக்கீடு (OSR) (D) மழைநீர் சேகரிப்பு

24. As per Development Control Regulations (DCR) minimum width of corridor for residential buildings

(A) 1.0 meter
(B) 1.5 meter
(C) 2.0 meter
(D) 2.4 meter

குடியிருப்பு கட்டிடங்களுக்கான குறைந்த பட்ச தாழ்வாரப் பகுதியின் அகலம் இருந்திட வளர்ச்சிக் கட்டுப்படுத்தும் நடைமுறையில் (DCR) தெரிவிக்கப்பட்டுள்ளது

(A) 1.0 மீட்டர்
(B) 1.5 மீட்டர்
(C) 2.0 மீட்டர்
(D) 2.4 மீட்டர்

25. As per Development control regularisation, Multi Storeyed Buildings means

(A) A Building exceeding 6 floors
(B) A Building exceeding 5 floors
(C) A Building exceeding 4 floors
(D) A Building exceeding 3 floors

வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறை (DCR) படி அடுக்குமாடி குடியிருப்புகள் என்பது கீழ்கண்ட எதனைக் குறிக்கின்றது

(A) 6 தளங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்கள்
(B) 5 தளங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்கள்
(C) 4 தளங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்கள்
(D) 3 தளங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்கள்

26. As per Development control regulations, No crusher is permissible within following distance from an existing residential area

(A) 400 meters
(B) 450 meters
(C) 475 meters
(D) 500 meters

வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறைகள் படி கீழே குறிப்பிட்டுள்ள எந்த தொலைவிற்குள் குடியிருப்பு பகுதியிலிருந்து கல் நொறுக்கும் கட்டமைப்பினை (Crusher) அனுமதிக்க இயலாது

(A) 400 மீட்டர்
(B) 450 மீட்டர்
(C) 475 மீட்டர்
(D) 500 மீட்டர்

27. As per development control regulations, Minimum Road width for special Building is,

(A) 7 meter
(B) 8 meter
(C) 9 meter
(D) 10 meter

வளர்ச்சிக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளின் (DCR) கீழ் சிறப்பு கட்டிடங்களுக்கான குறைந்தபட்ச சாலையின் அகலம் வரையறை செய்யப்பட்டுள்ளது

(A) 7 மீட்டர்
(B) 8 மீட்டர்
(C) 9 மீட்டர்
(D) 10 மீட்டர்

28. In layout formation the width of the road is 9 m, the Building line shall be provided as follows

(A) 1.5 meter (B) 3.0 meter

(C) 3.5 meter (D) 4.0 meter

மனைப்பிரிவு உருவாக்கப்படும் பொழுது அமைக்கப்படும் சாலையின் அகலம் 9 மீ இருக்கும் நிலையில் கட்டிட வரைகோடானது (Building line) பின்வருமாறு வழங்கப்பட வேண்டும்

(A) 1.5 மீட்டர் (B) 3.0 மீட்டர்

(C) 3.5 மீட்டர் (D) 4.0 மீட்டர்

29. When the layout framed, which of the following extent below need not allocate open space of land for public purpose

(A) 4000 sq.m (B) 3500 sq.m

(C) 3000 sq.m (D) 2500 sq.m

மனைப்பிரிவு உருவாக்கப்படும் பொழுது கீழே குறிப்பிட்டுள்ள எந்த பரப்பளவிற்கு குறைவாக அமையும் பொழுது பொது பயன்பாட்டிற்கான திறந்தவெளி ஒதுக்கீடு செய்ய வேண்டியதில்லை

(A) 4000 ச.மீ. (B) 3500 ச.மீ.

(C) 3000 ச.மீ. (D) 2500 ச.மீ.

30. In commercial buildings as per Development control regulations up to following floor area no parking space required

(A) 50 sq.m. (B) 60 sq.m

(C) 70 sq.m (D) 75 sq.m

வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறைகளின்படி வணிக கட்டிடங்களுக்கு எந்த பரப்பளவு வரையிலான கட்டிடங்களுக்கு வாகன நிறுத்துமிடம் வேண்டியதில்லை

(A) 50 ச.மீ. (B) 60 ச.மீ.

(C) 70 ச.மீ. (D) 75 ச. மீ.

31. As per Development control regulations which of the following schedule describes parking standards

(A) Schedule V (B) Schedule IV

(C) Schedule II (D) Schedule III

வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறைகளின் படி பின்வரும் எந்த அட்டவணையின் கீழ் வாகன நிறுத்துமிட வரையரைகள் குறித்து விளக்குகிறது.

(A) அட்டவணை V (B) அட்டவணை IV

(C) அட்டவணை II (D) அட்டவணை III

32. Which of the following schedule describes special regulations for physically disabled persons under Development control regulations

(A) Schedule II (B) Schedule III

(C) Schedule IV (D) Schedule V

வளர்ச்சி கட்டுப்படுத்தும் நடைமுறைகள் கீழ் எந்த அட்டவணையில் ஊனமுற்ற நபர்களுக்கு சிறப்பு நடைமுறைகள் குறித்து தெரிவிக்கின்றது

(A) அட்டவணை II (B) அட்டவணை III

(C) அட்டவணை IV (D) அட்டவணை V

33. Total number of schedules in Development control regulations explaining various special provisions are

(A) 7 Schedules (B) 8 Schedules

(C) 6 Schedules (D) 5 Schedules

வளர்ச்சி கட்டுபடுத்தும் நடைமுறைகள் மொத்தம் எத்தனை அட்டவணைகளைக் கொண்டு சிறப்பு ஏற்பாடுகள் குறித்து விவரிக்கின்றது

(A) 7 அட்டவணைகள் (B) 8 அட்டவணைகள்

(C) 6 அட்டவணைகள் (D) 5 அட்டவணைகள்

34. Tamilnadu Transparency in tender Act section 3 describes following provision in tender activities

(A) Tender Document

(B) Prohibition and procurement except by tenders

(C) Tender Bulletin

(D) Functions of Bulletin officer

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் பிரிவு 3-ன் கீழ் ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை தொடர்பாக பின்வரும் ஏற்பாடு பற்றி எடுத்துரைக்கின்றது

(A) ஒப்பந்தப்புள்ளி ஆவணம்

(B) ஒப்பந்தப்புள்ளியின்றி கொள்முதல் செய்வதற்கான தடை

(C) ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

(D) ஒப்பந்தப்புள்ளி அறிக்கை அலுவலரின் பணிகள்

35. Regulations of tenders explained in the following sections of the Tamilnadu transparency in tender Act

(A) Section 4 (B) Section 5

(C) Section 6 (D) Section 7

ஒப்பந்தப்புள்ளியின் ஒழுங்கு முறைகள் குறித்து தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின் எந்தப் பிரிவின் கீழ் விளக்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 4 (B) பிரிவு 5

(C) பிரிவு 6 (D) பிரிவு 7

36. Tamilnadu Tender transparency Act section 12 describes following provisions of the tender

(A) Appeal

(B) Right to reject tender

(C) Opening of tender

(D) Evaluation and Acceptance of tender

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் பிரிவு 12 ஆனது ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக பின்வரும் ஏற்பாடுகளை எடுத்துரைக்கின்றது

(A) மேல்முறையீடு

(B) ஒப்பந்தப்புள்ளியினை நிராகரிக்கும் உரிமை

(C) ஒப்பந்தபுள்ளி திறத்தல்

(D) ஒப்பந்தப்புள்ளியினை மதிப்பீடு செய்தல் மற்றும் ஏற்றுக்கொள்ளுதல்

37. Tamilnadu Tender Transparency Act in which of the following section given powers to make rules

(A) Section 20 (B) Section 21

(C) Section 22 (D) Section 23

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற சட்டத்தின் கீழ் எந்தப்பிரிவில் உரிய விதிகளை உருவாக்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 20 (B) பிரிவு 21

(C) பிரிவு 22 (D) பிரிவு 23

38. In Tamilnadu Tender Transparency Act, the following section describes the Evaluation and Acceptance of Tenders

(A) Section 8 (B) Section 9

(C) Section 10 (D) Section 11

கீழ்காணும் எந்தப் பிரிவின் கீழ் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற சட்டத்தின் படி ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு செய்தல் மற்றும் ஏற்றுக்கொள்தல் குறித்து விவரிக்கின்றது

(A) பிரிவு 8 (B) பிரிவு 9

(C) பிரிவு 10 (D) பிரிவு 11

39. Tamilnadu Transparency in Tender rules 2000 having how many chapters

(A) 7 Chapters (B) 6 Chapters

(C) 5 Chapters (D) 4 Chapters

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000-ன் மொத்தம் எத்தனை அத்தியாயங்களை கொண்டுள்ளது

(A) 7 அத்தியாயங்கள் (B) 6 அத்தியாயங்கள்

(C) 5 அத்தியாயங்கள் (D) 4 அத்தியாயங்கள்

40. In "Two Cover system" which of following statement is correct regarding tender procedures.
(A) The Tenders are required to submit two separated sealed covers simultaneously
(B) One cover containing EMD and Technical qualification
(C) Submit second cover containing financial quotation
(D) All the above are correct

ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக "இரண்டு உரை முறை" நடைமுறையில் பின்வரும் எந்த கூற்று சரியானது
(A) ஒப்பந்ததாரர்கள் இரண்டு சீலிட்ட உரைகளை தனித்தனியாக ஒரே சமயத்தில் சமர்பிக்க வேண்டும்
(B) ஒரு உரையில் ஆரம்ப இருப்புத்தொகை (EMD) தொழில் நுட்ப தகுதி கொண்டிருத்தல் வேண்டும்
(C) இரண்டாம் உறையில் விலை விகிதம் குறிப்பிட்டு சமர்பிக்க வேண்டும்
(D) மேற்குறிய அனைத்தும் சரியானவை

41. How many methods of tendering explained in rule 4 of the Tamilnadu transparency in tender rules 2000.
(A) 3 methods
(B) 4 methods
(C) 5 methods
(D) 2 methods

எத்தனை வகையான ஒப்பந்த முறைகள் பற்றி விதி 4-ன் கீழ் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000 ஆனது விளக்குகின்றது
(A) 3 முறைகள்
(B) 4 முறைகள்
(C) 5 முறைகள்
(D) 2 முறைகள்

42. In Tamilnadu Transparency in Tender Rules 2000 in which of the following rule explaining award of Tenders
(A) Rule 33
(B) Rule 32
(C) Rule 31
(D) Rule 30

தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்த விதிகள் 2000 ன் கீழ் பின்வரும் விதி ஒப்பந்தம் வழங்குதல் குறித்து விவரிக்கின்றது
(A) விதி 33
(B) விதி 32
(C) விதி 31
(D) விதி 30

43. As per TNDM Act 1920 under section 12B, Remuneration for chairman, Vice chairman and councilors their service following statement is correct
(A) Chairman eligible to get remuneration
(B) Vice chairman eligible to get remuneration
(C) Councillor not eligible to get remuneration
(D) Chairman vice chairman and councillor are not eligible to get remuneration

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் பிரிவு 12-B யின் படி தலைமையர், துணைத்தலைமையர் மற்றும் உறுப்பினர் உழைப்பூதியம் தொடர்பாக கீழ்கண்ட கூற்று சரியானது
(A) தலைமையர் உழைப்பூதியம் பெறத் தகுதியானவர்
(B) துணைத்தலைமையர் உழைப்பூதியம் பெறத் தகுதியானவர்
(C) உறுப்பினர் உழைப்பூதியம் பெறத் தகுதியற்றவர்
(D) தலைமையர், துணைத்தலைமையர் மற்றும் உறுப்பினர் உழைப்பூதியம் பெற தகுதியற்றவர்கள்

44. A commission shall be appointed by the state government in each municipality included in

(A) Schedule IX
(B) Schedule X
(C) Schedule XI
(D) Schedule XII

கீழ்காணும் அட்டவணையின்படி ஒவ்வொரு நகராட்சிக்கும் மாநில அரசினால் ஆணையாளர் நியமிக்கப்படுவார்

(A) அட்டவணை IX
(B) அட்டவணை X
(C) அட்டவணை XI
(D) அட்டவணை XII

45. Functions of the chairman described in following section of the TNDM Act 1920.

(A) Section 13
(B) Section 13A
(C) Section 12
(D) Section 12A

நகர்மன்றத் தலைவரின் செய்கடமைகள் குறித்து TADM Act 1920-ல் பின்வரும் பிரிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 13
(B) பிரிவு 13 A
(C) பிரிவு 12
(D) பிரிவு 12 A

46. Emergency powers of Executive authority provision given in the following section of TNDM Act 1920.

(A) Section 14
(B) Section 15
(C) Section 18
(D) Section 18 A

செயலாட்சி அதிகாரியின் நெருக்கடி கால அதிகாரங்கள் தொடர்பாக TNDM Act 1920 ன் கீழ் பின்வரும் பிரிவில் குறிப்பிட்டுள்ளது

(A) பிரிவு 14
(B) பிரிவு 15
(C) பிரிவு 18
(D) பிரிவு 18 A

47. Under section 16 in TNDM Act 1920 the Executive authority to incur petty contigent expenditure not exceeding

(A) 50 Rupees
(B) 100 Rupees
(C) 200 Rupees
(D) 500 Rupees

TNDM Act 1920 பிரிவு 16 ன் கீழ் எதிர்பாரா சொற்ப செலவீனங்களை செயலாட்சி அதிகாரியானவர் கீழே குறிப்பிட்டுள்ள தொகைக்கு மிகாமல் மேற்கொள்ளலாம்

(A) 50 ரூபாய்
(B) 100 ரூபாய்
(C) 200 ரூபாய்
(D) 500 ரூபாய்

48. Rights and duties of the commissioner explained in following section of TNDM Act 1920.

(A) Section 18
(B) Section 18A
(C) Section 19
(D) Section 20

ஆணையரின் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் குறித்து TNDM Act 1920 ல் பின்வரும் பிரிவில் விளக்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 18
(B) பிரிவு 18 A
(C) பிரிவு 19
(D) பிரிவு 20

49. Under TNDM Act 1920 section 23 given provision to constituting which of the following committee

(A) Ward committee (B) Special committee

(C) Standing committee (D) Taxation appeal committee

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன் கீழ் பிரிவு 23 ஆனது பின்வரும் எந்தக் குழுவினை அமைத்திட வழிவகை ஏற்படுத்தப்பட்டுள்ளது

(A) வார்டு குழு (B) சிறப்புக் குழு

(C) நிலைக் குழு (D) வரிவிதிப்பு மேல் முறையீட்டுக் குழு

50. Under TNDM Act 1920 which of the following section explains Rules and Regulations for Proceedings of council.

(A) Section 25 (B) Section 26

(C) Section 27 (D) Section 28

தமிழ்நாடு மாவட்ட நகராட்சியின் சட்டம் 1920 ன் கீழ் பின்வரும் எந்தப் பிரிவில் மன்ற நடவடிக்கைக்கான விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகள் குறித்து விளக்குகிறது

(A) பிரிவு 25 (B) பிரிவு 26

(C) பிரிவு 27 (D) பிரிவு 28

51. Appointment of joint committee powers vested with

(A) Chairman (B) Commissioner

(C) Council (D) State Government

கூட்டுக்குழுவினை நியமிக்கும் அதிகாரம் கீழ்காணும் யாருக்கு உள்ளது?

(A) மன்றத்தலைவர் (B) ஆணையாளர்

(C) நகர்மன்றம் (D) மாநில அரசு

52. Notification of Election made under following section of TNDM Act 1920.

(A) Section 27 (B) Section 28

(C) Section 30 (D) Section 31

தேர்தல் அறிவிப்பானது TNDM Act 1920 ன் கீழ் பின்வரும் பிரிவின் படி செய்யப்படுகின்றது

(A) பிரிவு 27 (B) பிரிவு 28

(C) பிரிவு 30 (D) பிரிவு 31

53. Annual Administration report to be submitted the first day of every year on

(A) January 1 (B) February 28

(C) April 1 (D) December 31

நிர்வாக அறிக்கையானது பின்வரும் எந்த நாளில் ஒவ்வொரு ஆண்டும் சமர்பிக்கப்பட வேண்டும்

(A) ஜனவரி 1 (B) பிப்ரவரி 28

(C) ஏப்ரல் 1 (D) டிசம்பர் 31

54. In which of the following section in TNDM Act 1920 explain collector's power to Enforce execution of resolution

(A) Section 33 (B) Section 34
(C) Section 35 (D) Section 36

TNDM Act 1920 ன் கீழ் எந்தப் பிரிவில் தீர்மானங்களை செய்திடுவதற்கான ஆட்சியரின் அதிகாரம் குறித்து விளக்குகிறது?

(A) பிரிவு 33 (B) பிரிவு 34
(C) பிரிவு 35 (D) பிரிவு 36

55. Under section 37 TNDM Act 1920, which of the following power given in Administration of municipalities

(A) State Government's power to appoint officers to supervise municipalities
(B) Control over municipal electrical undertakings
(C) Power to suspend or cancel resolution
(D) Emergency power of collector

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ல் பிரிவு 37 ன் கீழ் நகராட்சி நிர்வாகத்தில் கீழ்காணும் எந்த அதிகாரம் வரையறை செய்யப்பட்டுள்ளது?

(A) கண்காணிப்பாளர்களை நியமிக்க மாநில அரசின் அதிகாரம்
(B) நகராட்சி மின்சார நிறுவனங்கள் மீது கட்டுப்பாடு
(C) தீர்மானத்தினை நிறுத்தி வைக்க அல்லது நீக்கம் செய்வதற்கான அதிகாரம்
(D) ஆட்சியரின் நெருக்கடி கால அதிகாரம்

56. Motion of no confidence in Chairman or Vice Chairman who will preside and convene the meeting

(A) Regional Director of municipal Administration
(B) Additional Director of municipal Administration
(C) Municipal Commissioner
(D) District collector

மன்றத்தலைவர் அல்லது மன்ற துணைத்தலைவரின் மீதான நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தொடர்பான கூட்டத்தினை பின்வரும் யார் தலைமையேற்று நடத்துவார்?

(A) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் (B) நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர்
(C) நகராட்சி ஆணையர் (D) மாவட்ட ஆட்சித்தலைவர்

57. The municipality be reconstituted with effect from a date which shall not be later than from the date of dissolution is

(A) 3 months (B) 6 months
(C) 12 months (D) No prescribed time limit

நகராட்சி மன்றமானது கலைக்கப்பட்ட தேதியிலிருந்து பின்வரும் எந்த காலக்கெடுவிற்குள் மறுபடியும் செயல்திறம் பெறுமாறு அமைக்கப்பட வேண்டும்?

(A) 3 மாதங்கள் (B) 6 மாதங்கள்
(C) 12 மாதங்கள் (D) குறிப்பிட்ட காலக்கெடு இல்லை

58. Powers of State Election Commission is described in following section of TNDM Act 1920.

(A) Section 48 (B) Section 48D

(C) Section 48C (D) Section 48A

மாநில தேர்தல் ஆணையத்திற்கான அதிகாரங்கள் குறித்து TNDM Act 1920 ல் பின்வரும் பிரிவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது

(A) பிரிவு 48 (B) பிரிவு 48 D

(C) பிரிவு 48 C (D) பிரிவு 48 A

59. A person convicted of an offence punishable under the prosecution of Civil Rights Act 1955 shall be disqualified for election for a period of?

(A) 3 years (B) 6 years

(C) 4 years (D) 5 years

1955 ஆம் ஆண்டு குடிமையியல் உரிமைகள் பாதுகாப்பு சட்டத்தின் படி குற்றச் செயலுக்காக தண்டனை பெறப்பட்ட நபர் எத்தனை ஆண்டுகளுக்கு தேர்தலில் போட்டியிட தகுதியற்றவராவார்?

(A) 3 வருடங்கள் (B) 6 வருடங்கள்

(C) 4 வருடங்கள் (D) 5 வருடங்கள்

60. Breaches of official duty in connection with election shall be punishable with fine which may extend to

(A) 5000 Rupees (B) 3000 Rupees

(C) 1000 Rupees (D) 500 Rupees

தேர்தல் தொடர்பான அலுவல் கடமையை மீறுவோறுக்கு தண்டனையுடன் கீழ்காணும் தொகை வரையிலான அபராதம் விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது

(A) 5000 ரூபாய் (B) 3000 ரூபாய்

(C) 1000 ரூபாய் (D) 500 ரூபாய்

61. Which of the following section deals with Inventory of Municipal property under TNDM Act 1920?

(A) Section 64 (B) Section 65

(C) Section 66 (D) Section 67

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் பின்வரும் இந்தப் பிரிவில் நகராட்சி சொத்தின் பொருள் விளக்கப்பட்டியல் குறித்து எடுத்துரைக்கின்றது?

(A) பிரிவு 64 (B) பிரிவு 65

(C) பிரிவு 66 (D) பிரிவு 67

62. In I Grade municipality the contract committee have the power of making any contract value does not exceed the sun specified below

(A) 20,000 Rupees (B) 30,000 Rupees

(C) 40,000 Rupees (D) 50,000 Rupees

முதல்நிலை நகராட்சியின் ஒப்பந்தக் குழுவானது கீழே குறிப்பிட்டுள்ள எந்த தொகைக்கு மேற்படாது ஒப்பந்தம் செய்து கொள்ளும் அதிகாரமானது அளிக்கப்பட்டுள்ளது

(A) 20,000 ரூபாய் (B) 30,000 ரூபாய்

(C) 40,000 ரூபாய் (D) 50,000 ரூபாய்

63. In General Revision of property tax, Gap between two General Revisions is

(A) 4 years (B) 5 years

(C) 3 years (D) 6 years

சொத்துவரியினை பொதுவாக திருத்தியமைக்கும்பொழுது ஒரு பொதுவான திருத்தியமைத்தலுக்கும் மற்றொரு திருத்தியமைத்தலுக்குமான கால இடைவெளி,

(A) 4 வருடங்கள் (B) 5 வருடங்கள்

(C) 3 வருடங்கள் (D) 6 வருடங்கள்

64. Under which of the following rule in TNDM Act 1920 has given provision for Taxation appeal committee.

(A) Section 87 (B) Section 88

(C) Section 89 (D) Section 88A

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் பின்வரும் எந்தப் பிரிவில் வரி மேல்முறையீட்டுக்குழு அமைத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

(A) பிரிவு 87 (B) பிரிவு 88

(C) பிரிவு 89 (D) பிரிவு 88A

65. Which of the following Average half-yearly income below is not covered under profession tax coverage?

(A) 30,001 Rupees (B) 21,001 Rupees

(C) 45,001 Rupees (D) 60,001 Rupees

பின்வரும் எந்த சராசரி அரையாண்டு வருமானத்திற்கு கீழ் உள்ளவர்கள் தொழில்வரி விதிப்பு வரம்பிற்கு கொண்டுவரப்படுவதில்லை?

(A) 30,001 ரூபாய் (B) 21,001 ரூபாய்

(C) 45,001 ரூபாய் (D) 60,001 ரூபாய்

66. Ward committee having population of

(A) 1 lakh or more (B) 2 lakhs or more

(C) 3 lakhs or more (D) 5 lakhs or more

கீழ்கண்ட மக்கட்தொகையினை உடையதாக வார்டு குழுவானது அமைகின்றது

(A) 1 லட்சம் அல்லது மேல் (B) 2 லட்சம் அல்லது மேல்

(C) 3 லட்சம் அல்லது மேல் (D) 5 லட்சம் அல்லது மேல்

67. Which of the following section in TNDM Act 1920 has given powers to council to make bylaws for water supply?

(A) Section 132 A (B) Section 133

(C) Section 134 (D) Section 135

TNDM Act 1920 ன் கீழ் பின்வரும் எந்தப்பிரிவில் நீர் வழங்கலுக்கான துணைவிதிகள் இயற்றிட மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) பிரிவு 132 A (B) பிரிவு 133

(C) பிரிவு 134 (D) பிரிவு 135

68. Under TNDM Act 1920 in section 190 describes which of the following provisions?

(A) Naming of public streets
(B) Numbering of Buildings
(C) Public street open to all
(D) Removal of Encroachments

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் பிரிவு 190 ஆனது கீழ்கண்ட எந்த ஏற்பாடுகளை பற்றி விவரிக்கின்றது?

(A) பொது சாலைகளுக்கு பெயரிடுதல்
(B) கட்டிடங்களுக்கு இலக்கமிடுதல்
(C) பொதுத்தெரு அனைவருக்கும்
(D) ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

69. The following section of TNDM Act 1920 discussing about stoppage of work endangering human life

(A) Section 204
(B) Section 205
(C) Section 206
(D) Section 207

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் எந்தப் பிரிவில் உயிருக்கு அபாயம் உண்டாக்கத்தக்க வேலையை நிறுத்துவது குறித்து விவாதிக்கின்றது?

(A) பிரிவு 204
(B) பிரிவு 205
(C) பிரிவு 206
(D) பிரிவு 207

70. Any person has been elected for two or more wards. He has to intimate to the commissioner from the last date of such election, the ward for which he chooses to serve?

(A) 7 days
(B) 15 days
(C) 21 days
(D) 30 days

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வார்டுகளுக்கு ஒருவரே தேர்ந்து எடுக்கப்பட்டால் அத்தகைய கடைசி தேர்தல் முடிவுற்ற தேதியிலிருந்து எத்தனை நாட்களுக்குள் எந்த வார்டிற்கு பிரதிநிதியாக செயல்பட விரும்புகிறார் என ஆணையருக்கு தெரிவிக்க வேண்டும்?

(A) 7 நாட்கள்
(B) 15 நாட்கள்
(C) 21 நாட்கள்
(D) 30 நாட்கள்

71. Which of the following chapter in TNDM Act 1920 discussing about Nuisances?

(A) Chapter 14
(B) Chapter 13
(C) Chapter 12
(D) Chapter 11

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் பின்வரும் எந்த அத்தியாயமானது தொல்லைகள் குறித்து விவரிக்கின்றது?

(A) அத்தியாயம் 14
(B) அத்தியாயம் 13
(C) அத்தியாயம் 12
(D) அத்தியாயம் 11

72. In TNDM Act 1920 following section explains provision of Municipal Slaughter houses

(A) Section 254
(B) Section 253
(C) Section 252
(D) Section 251

TNDM Act 1920 ன் கீழ் எந்தப்பிரிவில் நகராட்சியானது ஆடு, மாடுகளை வெட்டுமிடங்களுக்கான ஏற்பாடு செய்தல் குறித்து தெரிவிக்கின்றது?

(A) பிரிவு 254
(B) பிரிவு 253
(C) பிரிவு 252
(D) பிரிவு 251

73. In TNDM Act 1920 under section 262 deals with following matter regarding markets

(A) Public Market

(B) Powers in respect of public markets by municipal authorities

(C) Licence for private markets

(D) Decision of disputes as to whether places are markets

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 ன் கீழ் பிரிவு 262 ஆனது அங்காடி தொடர்பான பின்வரும் விவரங்களை எடுத்துரைக்கின்றது

(A) பொது அங்காடிகள்

(B) பொது அங்காடிகள் குறித்து நகராட்சி அதிகாரிகளுக்கு உள்ள அதிகாரம்

(C) தனியார் அங்காடிகளுக்கு உரிமம் வழங்குதல்

(D) குறிப்பிட்ட இடங்கள் அங்காடிகளாகுமா என்பது குறித்து எழும் தகராறுகளை தீர்மானித்தல்

74. Municipal solid waste Rules published under the notifications of the Government by following Department

(A) Ministry of Public Health

(B) Ministry of Urban affairs

(C) Ministry of Environment and Forestry

(D) Ministry of Planning and Development

நகராட்சி திடக்கழிவு விதிகள் அரசின் பின்வரும் துறை மூலம் அறிவிக்கை செய்து வெளியிடப்பட்டுள்ளது

(A) பொது சுகாதாரத்துறை அமைச்சகம்

(B) நகர்புற விவகாரத்துறை அமைச்சகம்

(C) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம்

(D) திட்டமிடல் மற்றும் வளர்ச்சித்துறை அமைச்சகம்

75. Municipal solid wastes (Management and Handling) rules 2000 having following schedules

(A) 3 Schedules

(B) 4 Schedules

(C) 5 Schedules

(D) 6 Schedules

நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ஆனது பின்வரும் அட்டவணைகளை உள்ளடக்கியது

(A) 3 அட்டவணைகள்

(B) 4 அட்டவணைகள்

(C) 5 அட்டவணைகள்

(D) 6 அட்டவணைகள்

76. Leachate means

(A) Chemical used for composting

(B) Final product of composting

(C) Liquid that seeps out from solid wastes

(D) Type of waste generated from industries

லீசேட் (Leachate) என்பது கீழ்கண்ட ஒன்றைக் குறிக்கும்

(A) உரமாக்கப் பயன்படும் வேதிப்பொருள்

(B) உருமாக்கலின் போது கிடைக்கும் இறுதிப்பொருள்

(C) திடக்கழிவிலிருந்து கசியும் கழிவு நீர்

(D) தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் ஒரு வகை கழிவு

77. Municipal solid waste (Management and Handling) rules 2000 the following rule explains Responsibility of Municipal authority

(A) Rule 3
(B) Rule 4
(C) Rule 5
(D) Rule 6

நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000 ன் கீழ் பின்வரும் எந்த விதியானது நகராட்சி அதிகாரி பொறுப்பினை விளக்குகிறது

(A) விதி 3
(B) விதி 4
(C) விதி 5
(D) விதி 6

78. As per Municipal solid waste rules. The Municipal authority shall make an application in following from for grant of authorization for setting up waste processing facility from State Board.

(A) Form – I
(B) Form – II
(C) Form – III
(D) Form – IV

நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி நகராட்சி அதிகாரி திடக்கழிவுகளை செயலாக்கம் மேற்கொள்வதற்கு பின்வரும் எந்த படிவம் மூலம் மாநில வாரியத்தின் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்

(A) Form – I
(B) Form – II
(C) Form – III
(D) Form – IV

79. Rule 6 of the Municipal solid waste rules 2000 explain the Responsibility of following

(a) Responsibility of State Government

(b) Responsibility of Union territory Administration

(c) Responsibility of Central Pollution Control Board

(d) Responsibility of State Board or the Committee

(A) (a) only

(B) (a) and (b)

(C) (c) only

(D) (c) and (d)

நகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2000 ன் படி விதி 6 ன் கீழ் பின்வரும் பொறுப்புகளை விளக்குகின்றது

(a) மாநில அரசின் பொறுப்புகள்

(b) யூனியன் பிரதேசங்களின் பொறுப்புகள்

(c) மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் பொறுப்புகள்

(d) மாநில வாரியம் அல்லது குழுக்களின் பொறுப்புகள்

(A) (a) மட்டும்

(B) (a) மற்றும் (b)

(C) (c) மட்டும்

(D) (c) மற்றும் (d)

80. As per Municipal solid wastes rules, the Municipal authority shall furnish its annual report in

(A) Form I

(B) Form II

(C) Form III

(D) Form IV

நகராட்சி திடக்கழிவு விதிகளின்படி நகராட்சி அதிகாரி ஆண்டறிக்கையினை பின்வரும் படிவத்தில் அளிக்கப்படவேண்டும்

(A) படிவம் I

(B) படிவம் II

(C) படிவம் III

(D) படிவம் IV

81. As per Municipal solid waste rules. The state Board or the committee shall issue authorization to municipal authority after receiving application within following days

(A) 30 days

(B) 60 days

(C) 45 days

(D) 90 days

நகராட்சி திடக்கழிவு விதிகளின் படி மாநில வாரியம் அல்லது குழுவானது தனது அங்கீகாரத்தினை நகராட்சி அதிகாரிக்கு விண்ணப்பம் பெறப்பட்ட கீழ்காணும் எத்தனை நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டும்

(A) 30 நாட்கள்

(B) 60 நாட்கள்

(C) 45 நாட்கள்

(D) 90 நாட்கள்

82. Under Municipal solid waste rules, The State Board or the committee shall issue the authorization to the Municipal authority in form

(A) Form II

(B) Form III

(C) Form IV

(D) Form V

நகராட்சி திடக்கழிவு விதிகளின் படி மாநில வாரியம் அல்லது குழுவானது நகராட்சி அதிகாரிக்கு கீழ்காணும் படிவத்தில் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

(A) படிவம் II

(B) படிவம் III

(C) படிவம் IV

(D) படிவம் V

83. As per Schedule I of Municipal solid waste rules, the performance of waste processing and disposal facilities monitored once in

(A) 2 months

(B) 3 months

(C) 6 months

(D) 9 months

நகராட்சி திடக்கழிவு விதிகளின் படி அட்டவணை I ல் வரையறுக்கப்பட்டுள்ளவாறு கழிவுகளை செயலாக்கம் மற்றும் அகற்றுதல் வசதிகளை பின்வரும் கால இடைவெளியில் கண் காணிக்கப்பட வேண்டும்

(A) 2 மாதங்கள்

(B) 3 மாதங்கள்

(C) 6 மாதங்கள்

(D) 9 மாதங்கள்

84. Land fill sites shall meet the specifications as given in the following schedule of Municipal solid waste rules

(A) Schedule III

(B) Schedule II

(C) Schedule I

(D) Schedule IV

திண்மக்கழிவு நிரப்பும் (Land fill) இடம் தொடர்பாக பின்பற்றப் படவேண்டிய குறிப்புகள் பற்றி நகராட்சி திடக்கழிவு விதிகளின் படி கீழ்காணும் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(A) அட்டவணை III

(B) அட்டவணை II

(C) அட்டவணை I

(D) அட்டவணை IV

85. As per Municipal solid wastes rules, The ground water quality of the following periphery of land fill site shall be periodically monitored

(A) 25 meters

(B) 50 meters

(C) 55 meters

(D) 60 meters

நகராட்சி திடக்கழிவு விதிகளின்படி திண்மக்கழிவு (Land fill) நிரப்பப்படும் இடத்தின் நிலத்தடி நீரின் தரத்தினை பின்வரும் சுற்றளவிற்கு அவ்வப்போது கண்காணிப்பு செய்யப்பட வேண்டும்

(A) 25 மீட்டர்

(B) 50 மீட்டர்

(C) 55 மீட்டர்

(D) 60 மீட்டர்

86. Which of the following chapter discussing about establishment in Part I of Municipal manual

(A) Chapter III

(B) Chapter IV

(C) Chapter V

(D) Chapter VI

நகராட்சி கையேட்டின் பாகம் I ல் பின்வரும் எந்த அத்தியாயத்தில் கீழ் பணியமைப்பு குறித்து விளக்கப்பட்டுள்ளது

(A) அத்தியாயம் III

(B) அத்தியாயம் IV

(C) அத்தியாயம் V

(D) அத்தியாயம் VI

87. An officer or servant of a municipal council deemed to be suspended who is detained in custody on a criminal charge for a period longer than

(A) 12 hours

(B) 24 hours

(C) 36 hours

(D) 48 hours

நகர் மன்றத்தின் அலுவலர் பணியாளர் குற்றவியல் நடவடிக்கைகாக கைது செய்யப்பட்டு பின்வரும் கால அளவிற்கு மேல் காவலில் வைக்கப்பட்டால் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்படக் கூடும்

(A) 12 மணி நேரம்

(B) 24 மணி நேரம்

(C) 36 மணி நேரம்

(D) 48 மணி நேரம்

88. A servant retired from service who is eligible for gratuity shall be submit an application within

(A) 2 months

(B) 3 months

(C) 6 months

(D) 12 months

பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர் பணிக்கொடை பெற தகுதியிருப்பின் பின்வரும் எவ்வளவு காலத்திற்குள் விண்ணப்பம் சமர்பிக்கப்பட வேண்டும்

(A) 2 மாதங்கள்

(B) 3 மாதங்கள்

(C) 6 மாதங்கள்

(D) 12 மாதங்கள்

89. As per municipal manual The Executive authority shall maintain the following accounts and Registers in the municipal office

(A) 15

(B) 16

(C) 17

(D) 18

நகராட்சி கையேட்டின்படி செயலாட்சி அதிகாரியால் பின்வரும் எத்தனை பதிவேடுகள் மற்றும் கணக்கு புத்தகங்கள் நகராட்சி அலுவலகத்தில் பராமரித்திட தெரிவிக்கப்பட்டுள்ளது

(A) 15

(B) 16

(C) 17

(D) 18

90. On Completion of General revision of all the words, the executive authority should publish in the notice required under

(A) Rule 6 of schedule IV

(B) Rule 7 of schedule IV

(C) Rule 8 of schedule IV

(D) Rule 9 of schedule IV

பொது சீராய்வானது அனைத்து வார்டுகளிலும் முடிக்கப்பட்ட நிலையில் செயலாட்சி அதிகாரி பின்வரும் விதியின் படி அதனை அறிவிப்பாக வெளியிட வேண்டும்

(A) விதி 6 ன் படி அட்டவணை IV

(B) விதி 7 ன் படி அட்டவணை IV

(C) விதி 8 ன் படி அட்டவணை IV

(D) விதி 9 ன் படி அட்டவணை IV

91. Within Municipal limit any organisation or persons during business can be levied profession tax in half year if functioning totally not less than

(A) 30 days

(B) 60 days

(C) 90 days

(D) 120 days

நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் எந்த ஒரு நிறுவனம் அல்லது நபர் தொழில் மேற்கொள்ளும் நிலையில் மொத்தமாக கீழே குறிப்பிட்டுள்ள நாட்களுக்கு குறைவின்றி செயல்பட்டால் தொழில்வரி விதிக்கலாம்

(A) 30 நாட்கள்

(B) 60 நாட்கள்

(C) 90 நாட்கள்

(D) 120 நாட்கள்

92. As per municipal manual the executive authority shall personally check following percent of the original receipts each month

(A) 1 percent

(B) 2 percent

(C) 3 percent

(D) 5 percent

நகராட்சி கையேட்டின் படி செயலாட்சி அதிகாரி அசல் வரவின இரசீதுகளை ஒரு மாதத்தில் கீழ்காணும் சதவீதத்திற்கு சுயமாக சரிபார்த்தல் வேண்டும்

(A) 1 சதவீதம்

(B) 2 சதவீதம்

(C) 3 சதவீதம்

(D) 5 சதவீதம்

93. As per municipal manual which of the following register should be maintained by the clerk dealing with Licences in Form No.62.

(A) Rent of Building and lands

(B) Slaughter house fees

(C) Avenue receipt

(D) Prosecution Register

நகராட்சி கையேட்டின்படி உரிமம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் பிரிவு எழுத்தர் படிவம் எண் 62 ல் கீழ்கண்ட எந்த பதிவேட்டினை முறையாக பராமரிக்கப்பட வேண்டும்

(A) நிலம் மற்றும் கட்டிட வாடகை பதிவேடு

(B) ஆடடிசாலை கட்டண பதிவேடு

(C) பலன் தரும் மரங்கள் வரவின பதிவேடு

(D) வழக்குகள் பதிவேடு

94. The following authority is authorised to declare local Holiday on the date of poll in connection with ordinary election to Municipal council

(A) Municipal commissioner

(B) District collector

(C) District superindent of police

(D) Revenue Divisional officer

பின்வரும் எந்த அதிகாரிக்கு நகர்மன்றத்திற்கு சாதாரண தேர்தல் நடைபெறும் பொழுது உள்ளூர் விடுமுறையாக அறிவிக்க அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளது

(A) நகராட்சி ஆணையர்

(B) மாவட்ட ஆட்சித்தலைவர்

(C) மாவட்ட காவல் கண்காணிப்பாளர்

(D) வருவாய் கோட்டாட்சியர்

95. As per Municipal manual the custodian of minute Book is

(A) Chairman

(B) Council clerk

(C) Commissioner

(D) Manager

நகராட்சி கையேட்டின் படி மன்ற கூட்ட நடவடிக்கை புத்தகம் யாருடைய பாதுகாப்பில் இருக்கப்பட வேண்டும்

(A) நகர்மன்ற தலைவர்

(B) மன்ற கூட்ட எழுத்தர்

(C) ஆணையாளர்

(D) மேலாளர்

96. The Municipal commissioner should place Diary of out door work done by him before hte council

(A) Each month
(B) Once in 2 months
(C) Once in 3 months
(D) Not necessary

நகராட்சி ஆணையாளர் புறப்பணி மேற்கொள்ளப்பட்ட விபரம் தொடர்பான நாட்குறிப்பினை நகர்மன்றக் கூட்டத்தில் பின்வருமாறு வைக்கப்பட வேண்டும்

(A) ஒவ்வொரு மாதமும்
(B) இரு மாதங்களுக்கு ஒரு முறை
(C) மூன்று மாதங்களுக்கு ஒருமுறை
(D) அவசியமில்லை

97. Which one of the following chalan register maintained in the municipal office correctly matched

(A) Property tax only – M.F. 101B
(B) Profession tax and other tax – M.F 102
(C) Miscellaneous Revenue – M.F 103
(D) Chilta – M.F. 101

நகராட்சி அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவரும் செலுத்து சீட்டு பதிவேடுகளில் பின்வரும் எது சரியாக பொருந்தியுள்ளது

(A) சொத்துவரி மட்டும் – M.F. 101B
(B) தொழில்வரி மற்றும் பிற வரியினங்கள் – M.F. 102
(C) இதர இனங்கள் வரவு – M.F. 103
(D) சிட்டா – M.F. 101

98. As per municipal manual, while purchasing any furniture, the municipal council should adopt the following preference order,

(1) Industrial cooperative society
(2) Jails and Borstal schools
(3) Government Department units of Industries Development
(4) Units run by panchayat council

(A) 4,3,2,1
(B) 2,3,4,1
(C) 1,2,3,4
(D) 1,4,3,2

நகராட்சி மன்றத்திற்கு தேவையான மரச்சாமன்களை பின்வரும் நிறுவனத்திடமிருந்து எந்த முன்னுரிமைப்படி கொள்முதல் செய்திட நகராட்சி கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(1) கூட்டுறவு தொழில் நிறுவனம்
(2) சிறைச்சாலை மற்றும் சீர்திருத்தப்பள்ளி
(3) அரசுத்துறை தொழில் வளர்ச்சி நிறுவனம்
(4) பஞ்சாயத்து சபை நடத்தப்படும் நிறுவனங்கள்

(A) 4,3,2,1
(B) 2,3,4,1
(C) 1,2,3,4
(D) 1,4,3,2

99. As a special case, due to urgency or other reasons the tenders received at the rates exceeding estimate rates by not more than following percent may be accepted by council without outside sanction

(A) 2%

(B) 3%

(C) 4%

(D) 5%

சிறப்பு நேர்வுகளில் பணியின் அவசரம் மற்றும் அவசிய காரணம் கருதி பெறப்பட்ட ஒப்பந்த புள்ளியில் மதிப்பீட்டினை விட கீழே குறிப்பிடப்பட்டுள்ள சதவீதத்திற்கு மிகாமல் உள்ள ஒப்பந்தப்புள்ளியினை வேறு வெளி அனுமதியின்றி மன்றமே அனுமதிக்கலாம்

(A) 2%

(B) 3%

(C) 4%

(D) 5%

100. Contractor's ledger should be maintained in M.F. No.84 by the following official as per municipal manual

(A) Municipal Engineer

(B) Overseer

(C) Technical Assistant

(D) Manager/Accountant

ஒப்பந்ததாரரின் பேரேடானது (Ledger) பின்வரும் அலுவலரால் M.F. No. 84 ல் பராமரித்திட நகராட்சி கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது

(A) நகராட்சி பொறியாளர்

(B) மேற்பார்வையாளர்

(C) தொழில்நுட்ப உதவியாளர்

(D) மேலாளர்/கணக்கர்